## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)

## வெள்ளிக் கிழமை பிரசங்கம்

## 09 செப்டம்பர் 2016 / 07 துல்ஹஜ் 1437 ஹிஜிரி

## <u>"ஸப்ர்" (பொறுமை) சொர்க்கம் செல்வதற்கான அனுமதிச் சீட்டு</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தக்வா (பக்தியை) ஏற்படுத்திக் கொள்ள கடின முயற்சி செய்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போமாக! அவன் தடுத்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வோமாக! நமது கடமைகளை நிறைவேற்றுவதில் "ஸப்ர்" ரைக் கடைப்பிடித்தால்

மறுமையில் அல்லாஹ்வின் சொர்க்கத்தில் நாம் இடம் அளிக்கப்படுவோம். ஆமீன்.

ஜமாஅத்தார்களே! கடந்த வாரப் பிரசங்கத்தில், அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கும் சிறப்பான பண்பாகிய "ஸப்ர்" ரைப் பற்றி விவாதிக்கப்பட்டது. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களாலும் மற்ற இறைத்தூதர்களாலும் முன்மாதிரியாகக் காண்பிக்கப்பட்ட "ஸப்ர்" (பொறுமை) தான், பொறுமையில் சிறந்ததாகும். நமது வாழ்க்கையில் பல சவால்களையும் சோதனைகளையும் சந்தித்து வரும் நாம், அவ்விதமானப் பொறுமையை ஆர்வத்துடன் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

பொறுமையில் நான்கு வகைகள் உள்ளன. வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ளும் ஒவ்வொருவரும் அவற்றைக் கடைப்பிடிப்பது அவசியமாகும் என சில சன்மார்க்க அறிஞர்கள் (உலமா) கருத்துத் தெரிவித்துள்ளார்கள். 1. அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் பொறுமை 2. பாவங்களைத் தவிர்ப்பதில் பொறுமை 3. எதிர்பாராத சம்பவங்களை எதிர்கொள்வதில் பொறுமை 4. நாகரீகமற்ற வார்த்தைகளால் விமர்சிக்கப்படும் போது பொறுமையைக் கடைப்பிடிப்பது. மேற்கண்டவற்றில் நான்காவது விஷயத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது தான் மிகவும் சிரமமானதாகும். இவ்வகையான பொறுமையைத் தான் இறைத்தூதர்கள், குறிப்பாக, செய்யிதினா முஹம்மது(ஸல்) அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

”ஸப்ர்” ஒருவரிடம் காணப்பட வேண்டிய அதிகப்பட்ஷமான நற்பண்பு அல்ல என்பதை நாம் அறிய வேண்டும். மாறாக, ”ஸப்ர்” ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டிய அவசியமான பண்பாகும். ஒவ்வொருவரும் தனது நீதிநெறிகள் மற்றும் ஆன்மீகத்தை அதிகரித்துக் கொள்ள ”ஸப்ர்” அவசியமாகும். மனிதகுலம், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் சோதிக்கப்படும் போது ”ஸப்ர்” அவசியமாகும் எனத் திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

إِنَّا خَلَقْنَا ٱلْإِنسَٰنَ مِن نُّطْفَةٍ أَمْشَاجٍ نَّبْتَلِيهِ فَجَعَلْنَٰهُ سَمِيعًۢا
بَصِيرًا ٢

பொருள்: (பின்னர் ஆண், பெண்) கலப்பான இந்திரியத் துளியிலிருந்து நிச்சயமாக மனிதனை நாமே படைத்தோம் - அவனை நாம் சோதிப்பதற்காக அவனைக் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் ஆக்கினோம். (அத்தியாயம்: அல்-இன்ஸான், வசனம்:2)

மேற்கண்ட வசனத்தின் மூலம், அல்லாஹ், தனது கட்டளைகள் மற்றும் தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் மனிதகுலத்தைச் சோதிப்பான் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அதே சமயம், மனிதகுலத்துக்கு அல்லாஹ், பார்க்கக்கூடிய மற்றும் கேட்கக் கூடிய ஆற்றல்களையும் வழங்கியுள்ளான். அதாவது, அல்லாஹ் ஏற்படுத்தும் கட்டளைகள் மற்றும் தடைகளை எதிர்கொண்டு, அச்சவால்களை வெற்றிகொள்வதற்கான உள்ளுணர்வுகளையும் அவர்களுக்கு ஏற்படுத்தி

யுள்ளான். அந்நிலையில், அல்லாஹ்வின் கட்டளைகளையும் கடமைகளையும் அவர்கள் பொறுமை மற்றும் மதிநுட்பத்துடன் நிறைவேற்றும் ஆற்றலைப் பெறுவார்கள்.

வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகள், அல்லாஹ்வின் மீதான தமது நபிக்கையை நிரூபிப்பதற்கான வாய்ப்புகளை மனிதகுலத்துக்கு ஏற்படுத்துகின்றன. அல்லாஹ்வின் வெகுமதிகளைப் பெறுவதற்கானத் தகுதியில் அவர்கள் உள்ளார்களா என்பதைத் தீர்மானிப்பதற்கான வாய்ப்பையும் அவை வழங்குகின்றன. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-அல்கபூத்" எனும் அத்தியாயத்தின் 2-3 வரையிலான வசனங்களில் கூறுகிறான்:

أَحَسِبَ ٱلنَّاسُ أَن يُتْرَكُوٓا۟ أَن يَقُولُوٓا۟ ءَامَنَّا وَهُمْ لَا يُفْتَنُونَ ﴿٢﴾
وَلَقَدْ فَتَنَّا ٱلَّذِينَ مِن قَبْلِهِمْ ۖ فَلَيَعْلَمَنَّ ٱللَّهُ ٱلَّذِينَ صَدَقُوا۟ وَلَيَعْلَمَنَّ
ٱلْكَٰذِبِينَ ﴿٣﴾

பொருள்: "நாங்கள் ஈமான் கொண்டிருக்கின்றோம்" என்று கூறுவதனால் (மட்டும்) அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களையும் நாம் சோதித்திருக்கின்றோம் - ஆகவே உண்மையுரைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிவான்; இன்னும் பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நாம் "ஈதுல் அள்ஹா" எனப்படும் ஹஜ்ஜுப் பெருநாளை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக "ஸப்ர்" எனப்படும் பொறுமையைக் கடைப்பிடித்த இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) அவர்களின் முன்மாதிரியை நினைத்து, அதில் சிந்தனை செய்வோமாக! தான், அல்லாஹ்வுக்கு அடிபனிந்தவன் என்பதை நிரூபிப்பதற்காக, அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்ற இப்ராஹிம் (அலை) தயங்கவில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

۞ وَإِذِ ٱبْتَلَىٰٓ إِبْرَٰهِـۧمَ رَبُّهُۥ بِكَلِمَـٰتٍ فَأَتَمَّهُنَّ ۖ قَالَ إِنِّى جَاعِلُكَ لِلنَّاسِ إِمَامًا ۖ
قَالَ وَمِن ذُرِّيَّتِى ۖ قَالَ لَا يَنَالُ عَهْدِى ٱلظَّـٰلِمِينَ ﴿١٢٤﴾

பொருள்: (இன்னும் இதையும் எண்ணிப்பாருங்கள்;) இப்ராஹீமை அவருடைய இறைவன் சில கட்டளைகளையிட்டுச் சோதித்தான்; அவற்றை அவர் முழுமையாக நிறைவேற்றினார்; நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு இமாமாக(த் தலைவராக) ஆக்குகிறேன்" என்று அவன் (அல்லாஹ்) கூறினான்; அதற்கு இப்ராஹீம் "என் சந்ததியினரிலும் (இமாம்களை ஆக்குவாயா?)" எனக் கேட்டார்; என் வாக்குறுதி(உம் சந்ததியிலுள்ள) அநியாயக்காரர்களுக்குச் சேராது என்று (அல்லாஹ்) கூறினான். (அத்தியாயம்: அல்-பகரா, வசனம்: 124)

ஜமாஅத்தார்களே!

இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்களின் ”தப்ஸீருல் குர்ஆன் அல்-அளீம்” போன்ற பிரபலமான திருக்குர்ஆன் விரிவுரைகளை நாம் ஆய்வு செய்து பார்த்தால், தற்போது உங்களுக்கு முன்பாக ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனத்தைப் பற்றி திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் விவாதித்துள்ளதைக் காணலாம். இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) அவர்களால் எதிர்கொள்ளப்பட்ட முக்கியமான சவால்களைப் பற்றி அவர்கள் விரிவாகக் கூறியுள்ளார்கள். கஃபத்துல்லாஹ்வைக் கட்டுதல், அதனை சுத்தமாக்குதல், ”நம்ரூத்” எனும் அரசனை எதிர்கொண்டு ”அல்லாஹ் ஒருவனே இறைவன்” என்பதை நிரூபிப்பதற்காக அவனுடன் விவாதத்தில் ஈடுபட்டது, அவனுடன் கருத்துவேறுபாடு கொள்வதில் உறுதியாக இருந்ததற்காக இப்ராஹிம் (அலை) அவர்கள் நெருப்பில் தூக்கி எறியப்பட்ட விவகாரம், தனது அன்பு மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிடுமாறு அவர்கள் கட்டளையிடப்பட்டது போன்ற பல விஷயங்களைப் பற்றி விவாதித்துள்ளார்கள்.

மேற்கண்ட அனைத்து சவால்களையும் இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) அவர்கள் ”ஸப்ர்” (பொறுமை) யுடன் எதிர்கொண்டு வெற்றி பெற்றார்கள். அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் தன்னால் முடிந்த அளவு சிறப்பாக நிறைவேற்றினார்கள்.

ஜமாஅத்தார்களே!

நாம் நம்மைப் பற்றி சிந்தித்துப் பார்த்து நமது குறைகளை நினைத்து வருந்துவோமாக! அன்பியாக்கள் (இறைத்தூதர்கள்) மற்றும் அவ்லியாக்களால் (இறை நேசர்கள்) எதிர்கொள்ளப்பட்ட சோதனைகள்

மற்றும் சவால்களால் நாமும் சோதிக்கப்படலாம். அது போன்ற சோதனைகளைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் நம்மிடம் இல்லை; எனினும், இறைத்தூதர்களால் காண்பிக்கப்பட்ட "ஸப்ர்" ரை ஆர்வத்துடன் பின்பற்ற நம்மால் முடியும். அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் போது, அல்லது துன்பத்தால் சோதிக்கப்படும் போது பொறுமையாக இருப்பதற்கு நமக்கு நாம் பயிற்றுவித்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளோம். பொறுமை என்பது அல்லாஹ்வினால் மிகவும் போற்றப்படும் அம்சமாகும். அது நம்மில் தொடர்ந்து காணப்படுவது அவசியமாகும். பொறுமையானது, அல்லாஹ்வின் மரியாதைக்குரிய, அவனது நிரந்தரமான சொர்க்கத்தில் இடம் பெற்ற அடியார்களில் நின்றும் நம்மை ஆக்கும். இதனைத் தான் அல்லாஹ் திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்:

إِنَّمَا يُوَفَّى ٱلصَّٰبِرُونَ أَجْرَهُم بِغَيْرِ حِسَابٍ ﴿١٠﴾

பொருள்: பொறுமையுள்ளவர்கள் தங்கள் கூலியை நிச்சயமாகக் கணக்கின்றிப் பெறுவார்கள். (அத்தியாயம்: அஜ்-ஜுமர், வசனம்: 10)

நாம் சோதனைகளை எதிர்கொள்ளும் போது, இவ்வாறு தான், அல்லாஹ், தான் விரும்புபவர்களைச் சோதிப்பான் என நமக்கு நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும், ஒருவரது தாங்கும் சக்தியை விட அதிகமாக அவரை அல்லாஹ் சோதிப்பதில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இவ்விதமான சிந்தனைகள் நம்மிடம் காணப்படும் போது நாம் உறுதியான நம்பிக்கையும் நோக்கமும் கொண்டவர்களாக ஆகலாம். ஒரு

ஆக்கப்பூர்வமான எண்ணம், சோதனைகளை எதிர்கொள்ளும் நாம் அமைதியாக இருப்பதற்கும், பிரச்னைகளுக்கு நல்ல தீர்வுகளைக் காண்பதற்கும் உதவியாக இருக்கும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

அல்ஹம்துலில்லாஹ்!(எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!) நாம், அல்லாஹ்வின் அருள்மிக்க துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களில் இருந்துக் கொண்டிருக்கின்றோம். இம்மாதத்தில் நாம் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான நற்செயல், பிறை ஒன்பது அன்று அதாவது, அர ஃபா தினத்தில் நோன்பு நோற்பதாகும். வரும் ஞாயிற்றுக்கிழமை தான் அர ஃபா தினம் ஆகும். அந்நாளில் நோன்பு நோற்பதானது, துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்கள் அனைத்திலும் நோன்பு நோற்பதை விடச் சிறப்பானதாகும் என அறிஞர்கள் ஏகோபித்து கருத்துத் தெரிவித்துள்ளார்கள். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நவின்ற பின்வரும் ஹதீது இதற்கு ஆதாரமாக உள்ளது:

صِيَامُ يَوْمِ عَرَفَةَ أَحْتَسِبُ عَلَى اللَّهِ أَنْ يُكَفِّرَ السَّنَةَ الَّتِي قَبْلَهُ وَالسَّنَةَ الَّتِي بَعْدَهُ

பொருள்: அர ஃபா தினத்தில் நோன்பு நோற்பதானது, கடந்த வருடம் மற்றும் வரும் வருடத்தின் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குக் காரணமாக உள்ளது. (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

புனிதமிக்க இத்தினங்களில், அதிகமான நற்காரியங்களைச் செய்வதற்கான பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்கி அருள்வானாக! மக்காவுக்கு

ஹஜ்ஜு செய்யச் சென்றுள்ள நமது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்களுக்கும்- அவர்களின் காரியங்கள் எளிதாக அமைவதற்காக- துஆச் செய்ய மறந்து விடாதீர்கள். அல்லாஹ் அவர்களின் ஹஜ்ஜை "ஹஜ்ஜன் மப்ரூர்" (ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக) ஆக்குவானாக! அடிக்கடி அல்லாஹ்வின் விருந்தாளியாக ஆகும் பாக்கியத்தை அல்லாஹ் நமக்கும் வழங்கி அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.